திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் உள்ள விழுப்பனூர் சிற்றூராட்சி சர்வே எண் 1354 மற்றும் 1355-ல், பல கோடி ரூபாய் மதிப்புள்ள 4 ஏக்கர், 70 சென்ட் அரசு தரிசு நிலத்தை ஒரு தனியார் கல்லூரி நிர்வாகம் தொடர்ந்து ஆக்கிரமிப்பு செய்து வருகின்றது. நானும் எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சரான மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களும், அந்த இடத்தை நேரடியாகச் சென்று பார்த்தபிறகும், தொடர்ந்து அந்தக் கல்லூரி நிர்வாகம் அந்த இடத்தைக் கைப்பற்ற முயற்சி செய்து, அங்கேயிருக்கின்ற அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பொது மக்களுக்கும், கல்லூரி நிர்வாகத்திற்கும் இடையே தொடர்ந்து பல்வேறு வகையில் பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *அந்த நிலத்தை அரசு கையகப்படுத்தி, அதற்கு முற்றுப்புள்ளி வைக்குமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி கேட்டால், விடையளிப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

பணிமனை

***281—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஆகஸ்ட் 9]

(அ) அவினாசி தொகுதி, அன்னூரில் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றத்தில் போக்குவரத்துத் துறை தொடர்பான வினாக்களுக்கு பதிலளிக்கும் வாய்ப்பளித்த உலகத் தமிழர்களின் தலைவர், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(அ) மற்றும் (ஆ) அவினாசி தொகுதி, அன்னூரில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து நிதி கிடைக்கப் பெறும்பட்சத்தில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி.*

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழவைத்து, இந்தப் பேரவையிலே பேச வாய்ப்புத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, அவினாசி தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்து, தங்கள் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். எனது அவினாசி தொகுதி, அன்னூரில் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்குப் போதுமான நிலம் உள்ளது; நான்கரை ஏக்கர் நிலம் உள்ளது. அதில் கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா? ஆம் எனில், எப்போது? (குறுக்கீடு)*

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கையில் அமர்ந்தவாறே, உறுப்பினரை நோக்கி “அமைச்சர் பணம் கேட்கிறார்; உங்களிடம் இல்லையா?” என்று சிரித்தபடியே கேட்டார்.)

அம்மா! என்னிடம் நிதி இல்லை அம்மா. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஏ.ஏ. கருப்பசாமி, கேள்வியைக் கேட்டு முடித்து விடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், "உறுப்பினருடைய தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து, தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் வழங்கினால் இந்தக் கட்டடம் கட்டித் தரப்படும்" என்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "அமைச்சர் அவர்கள் இதைக் கட்டித் தருவாரா?" என்று மீண்டும் கேட்டார். நான் மாண்புமிகு உறுப்பினரிடம், "அமைச்சர் உங்களிடம் பணம் கேட்கிறார்" என்றேன். அதற்கு மாண்புமிகு உறுப்பினர், "அம்மா, பணம் இல்லை" என்றார். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மனது வைத்து, இதற்கு ஒரு வழி காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோவை மண்டலத்தில் மொத்தம் 1,624 பேருந்துகளும், 21 பணி மனைகளும் பல இடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் 9 பணிமனைகள் கோவை மாநகரில் 830 பேருந்துகளுடன் இயங்கி வருகின்றன. இவற்றில் 5 பணிமனைகள் குறிப்பாக உக்கடம், சுங்கம் மற்றும் ஒண்டிபுதூர் ஆகியவை தலா 100 பேருந்துகளுக்கும் அதிகமாகக் கொண்டுள்ளன. மேற்படி பணிமனைகளில் 100 பேருந்துகளை நிறுத்துவதற்கு இடவசதி போதுமானதாக இல்லை. மேலும், 100 பேருந்துகள் எப்பொழுதும் பணி மனைகளின் வெளியிலேயே, குறிப்பாக, சாலைகளில் இரவு நேரங்களில் நிறுத்தப்படுகின்றன. பேருந்துகளை இரவு நேரங்களில் பணிமனைக்கு வெளியில் நிறுத்துவதால் வாகனப் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறாக இருப்பதாகக் காவல் துறை தெரிவிக்கின்றது.

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 1995 ஆம் ஆண்டு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோவை 3.93

2011 ஆகஸ்ட் 9]

ஏக்கர் நிலத்தை தனியாரிடமிருந்து கோவை மாவட்டம் அன்னூர் கிராமத்தில் எஸ்.எப். எண் 328/2 மற்றும் 328/3 இல் பணிமனை அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி கையகப்படுத்தப்பட்டுள்ள நிலம் கோவை–சத்தியமங்கலம் பிரதான சாலையில், கோவை மாநகரிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவிலும், அன்னூர் நகரிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. தற்போது அன்னூர் நகரத்தின் வழியாக 150 பேருந்துகள் தினமும் செல்கின்றன. அன்னூர் நகரைச் சுற்றி கீழ்க்காணும் பணிமனைகள் இயங்கி வருகின்றன. அன்னூருக்குக் கிழக்கே திருப்பூர் பணிமனை 35 கிலோ மீட்டர் தொலைவிலும், அன்னூருக்கு மேற்கே மேட்டுப்பாளையம் பணிமனை 22 கிலோ மீட்டர் தொலைவிலும், அன்னூருக்கு வடக்கே சத்தியமங்கலம் பணிமனை 35 கிலோ மீட்டர் தொலைவிலும், அன்னூருக்கு தெற்கே கோவை–உப்பிலிபாளையம் பணிமனை 32 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளன. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தமிழகத்தில் அத்தனைத் திட்டங்களையும் சிறப்பாகச் செயல்படுத்திவரும் இந்நிலையில், இந்த ஆண்டு போக்குவரத்துப் பணிமனை தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள். ஏதோ சொல்ல வருகிறீர்கள், சொல்லுங்கள்.

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தொகுதி மக்கள் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்து வாழ்த்தி, வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]